# மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

## கடற்பாசி வளர்த்தல் திட்டம்



ஐயா. வணக்கம்!



வணக்கம். வாங்க,
உங்களுக்கு என்ன
தகவல் வேண்டும்



கடற்பாசி வளர்க்கும்
திட்டம் ஏதேனும்
உள்ளதா?



மீன்வளம் மற்றும் மீனவர்
நலத்துறை மூலமாக மிதவைத்
தெப்பங்கள் மற்றும் கயிறுகள்
மூலமாக கடற்பாசி வளர்த்தல்
திட்டம் மீனவ மகளிருக்கு
செயல்படுத்தப்பட்டு வருகிறது.






ஐயா, இந்த திட்டம் எங்கெல்லாம் செயல்படுத்தப்பட்டு வருகிறது
இத்திட்டம் இராமநாதபுரம், தூத்துக்குடி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது
மானியம் எவ்வளவு கிடைக்கும்?
மூங்கில் மிதவை மூலமாக கடற்பாசி வளர்ப்பதற்கு ரூ.1500/– மொத்த செலவில் ரூ.900/– மானியமாக (60 விழுக்காடு) கிடைக்கும். கயிறுகள் மூலமாக கடற்பாசி வளர்ப்பதற்கு ரூ.8000/– மொத்த செலவில் ரூ.4800/– மானியமாக (60 விழுக்காடு) கிடைக்கும்

எத்தனை நாள் வளர்க்க
வேண்டும்– செலவு போக
வருமானம் எவ்வளவு
கிடைக்கும்?

தரமான கடற்பாசி விதைகளை
தேர்ந்தெடுத்து 45 நாள் வரை
வளர்க்க வேண்டும். ஒரு மூங்கில்
மிதவை மூலமாக 180 கிலோ
அறுவடை செய்து ரூ.3000 வரை
வருமானம் ஈட்டிட இயலும்
தரமான கடற்பாசி விதைகளை
தேர்ந்தெடுத்து கயிறு மூலமாக 45
நாட்கள் கடற்பாசி வளர்த்து 600
கிலோ அறுவடை செய்து ரூ.10000
வரை வருமானம் ஈட்டிட இயலும்.

இத்திட்டத்திற்கான
விண்ணப்பம் எங்கு
கிடைக்கும் ஐயா

விண்ணப்பம் மாவட்ட
மீன்வளம் மற்றும் மீனவர்
நலத்துறை அலுவலகத்தில்
கிடைக்கும்.





கடற்பாசி வளர்த்தல்
குறித்து மிகவும்
தெளிவாக
விவரங்கள்
அளித்ததற்கு நன்றி
ஐயா.



**மானியத்தில் கடற்பாசி வளர்த்தல் திட்டம் பெற தகுதியுடையவர்கள்**

மீனவ மகளிர்

**சமர்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம்
- குடும்ப அட்டை நகல்
- ஆதார் அட்டை நகல்
- வங்கி கணக்கு புத்தக நகல்